Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, NOVEMBER 27, 2023

திங்கட்கிழமை நவம்பர் 27, 2023 | ஒளி: 09 கதிர் 136 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## தேசிக்காய் எகிறியது



தேசிக்காய் விலை கடுமையாக உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

சந்தையில், ஒரு கிலோ கிராம் தேசிக்காய் விலை, 2,000 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

தற்போது பெய்து வரும் கனமழை காரணமாக, தேசிக்காய் அறுவடை குறைந்துள்ளதாலும், தேசிக்காய் தேவை அதிகமாக இருப்பதாலும், தேசிக்காய் விலை உயர்ந்துள்ளது என்றும் அறியமுடிகின்றது.



பிரபாகரனின் 69ஆவது பிறந்தநாள் நிகழ்வுக்கு

## கேக் வெட்டினர்

06) நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் 69ஆவது பிறந்தநாள் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (26) இடம்பெற்றது.

தொடர்ச்சி P2

## O/L பெறுபேறுகள் தாமதமாகும்

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



வெல்லம்பிட்டி சுற்றிவளைப்பில்

## 4 பெண்களுடன் 40 பேர் கைது

வெல்லம்பிட்டி- சிங்கபுர பிரதேசத்தில் ஞாயிறுக்கிழமை (26) அதிகாலை பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 04 பெண்கள் உட்பட 40 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## வடக்கைச் சேர்ந்த இரு இளைஞர்கள் கைது

சட்டவிரோதமான முறையில் வெளிநாடு செல்ல முயற்சித்த இரு இளைஞர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களான இரண்டு இளைஞர்களும் 25 மற்றும் 27 வயதுடையவர்கள் எனவும் இவர்கள் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2



பொதுத் தேர்தலை இலக்கு வைத்து

# புதிய கூட்டணி


எதிர்வரும் பொதுத் தேர்தலை இலக்காகக் கொண்டு புதிய அரசியல் கூட்டணியை உருவாக்கும் பணியில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க முன்னிலை வகித்துள்ளதாக அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

## 80 பேரடங்கிய குழுவுடன் பறக்கிறார் ஜனாதிபதி

டுபாயில் நடைபெறவுள்ள உலக காலநிலை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அடுத்த வாரம் வெளிநாடு செல்லவுள்ளார் என அறியமுடிகின்றது. இந்தப் பயணத்தில் எண்பது பேர் கொண்ட குழு பங்கேற்பதாகவும் கூறப்படுகின்றது.

தொடர்ச்சி P2






கட்டுநாயக்க விமான நிலையத்தில்

## கணினி அமைப்பு பலமுறை செயலிழந்து விடுவதாக தகவல்

கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் கணினி அமைப்பு ஞாயிற்றுக்கிழமை (26) மதியம் முதல் செயலிழந்ததை அடுத்து வெளிநாடுகளுக்குச் செல்ல வந்த ஆயிரக்கணக்கான விமானப் பயணிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கோபமடைந்தனர்.

குடிவரவுத் திணைக்களத்தின் கணினி அமைப்பு பல தனியார் நிறுவனங்களால் அமைக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருவதாகவும்,

தொடர்ச்சி P2




இணையவழி பாதுகாப்பு மசோதாவைப் பற்றி அறிந்தவர்களில்

## சுதந்திரத்தை மட்டுப்படுத்துமென 56% பேர் நினைக்கிறார்கள்

வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தினால் கோரப்பட்ட ஆய்வொன்றினால், இணையவழி பாதுகாப்பு மசோதா குறித்து தங்களுக்குத் தெரியும் என்று கூறியவர்களில் 56% பேர் இது சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கான சுதந்திரத்தை மட்டுப்படுத்தும் என்று கூறியுள்ளனர்.

'சமூக ஊடகங்களில் நடத்தையை ஒழுங்குபடுத்தும் மசோதாவை அரசாங்கம் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியது, அதைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?' என்ற கேள்விக்கு, பதிலளித்தவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் (34%) 'ஆம்' என்று பதிலளித்தனர்.

தொடர்ச்சி P2





## புலிகளின் உபகரணங்களை தேடி முன்னெடுக்கும் அகழ்வு தொடர்கிறது

சண்முகம் தவசீலன்

விடுதலைப் புலிகளின் இராணுவ உபகரணங்களை தேடி முள்ளிவாய்க்காலில் தோண்டும் நடவடிக்கை ஞாயிற்றுக்கிழமை(26) நான்காவது நாளாக முன்னெடுக்கப்பட்டது,

தொடர்ச்சி P2

## மனித புதைகுழி அகழ்வு: இன்று மீண்டும் ஆரம்பம்

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி 2ஆம் கட்டத்தின் ஆறாம் நாள் அகழ்வில் 5 மனித எலும்பு கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.



தொடர்ச்சி P2



## மாவீரர் எழுச்சியை குழப்ப முயற்சி

### ஏற்பாட்டாளர்கள் குற்றச்சாட்டு

சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல துயிலும் இல்லங்களில் மாவீரர் எழுச்சி நாள் செயற்பாடுகளைக் குழப்பும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருவதாக ஏற்பாட்டாளர்கள் குற்றச்சாட்டியுள்ளார்கள்

பலரது பெயர் விபரங்களைத் தாங்கி நீதிமன்ற கட்டளையைப் பெற்று அவர்களின் கையில் கொடுத்து நீதிமன்ற கட்டளையில் குறிப்பிட்ட விடயங்களுக்கு மேலாக சிவப்பு ,மஞ்சள் கொடிகள் கூட கட்ட கூடாது, பெயர் பொறிக்கக் கூடாது, கார்த்திகைப் பூ பாவிக்கக் கூடாது, என்றும் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டால் அவர்களைக் கைது செய்வோம் என்று மிரட்டும் தொனியிலும் தெரிவித்து வருகின்றார்கள்

இதேவேளை முள்ளிவாய்க்கால் பகுதியில் சமூக செயற்பாட்டாளர் ஒருவருடைய வீட்டில் பையில் போட்டு வைத்திருந்த சிகப்பு, மஞ்சள் கொடிகளை பொலிஸார் எடுத்துச் சென்றுள்ளார்கள்

மாத்தளன் அம்பலவன் பொக்கணை பகுதி, முள்ளிவாய்க்கால் மேற்கு இரட்டை வாய்க்கால் பகுதி, முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதி, முல்லைத்தீவு, அளம்பில் போன்ற பகுதிகளுக்குச் செல்லும் பொலிஸார் ஏற்பாட்டாளர்களை அச்சுறுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

PAGE 1 தொடர்ச்சிகள்

## கேக் வெட்டினர்

இதன்போது வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரின் பூர்வீக இல்லத்துக்கு முன்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது கேக் வெட்டி, வல்வெட்டித்துறை பாரம்பரிய உணவு வகைகளும் மக்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## O/L பெறுபேறுகள் தாமதமாகும்

இதுதொடர்பாக கருத்து தெரிவித்த கல்வி அமைச்சின் பேச்சாளர், இன்னும் ஒரிரு வாரங்களில் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடத் தீவிர முயற்சி எடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இம்மாத இறுதிக்குள் வெளியாக்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்திருந்தது. இந்நிலையில், தற்போது அதற்கான சாத்தியங்கள் மிகக்குறைவாக இருப்பதாகக் கல்வி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நடைமுறை ரீதியாக நிலவுகின்ற சிரமங்களால் பரீட்சை முடிவுகள் வெளியாவது இன்னும் தாமதிக்கலாம் என்று கூறப்படுகிறது.

## 4 பெண்களுடன் 40 பேர் கைது

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் உறுப்பினர்கள், அதிகரித்த குற்றங்கள் மற்றும் போதைப்பொருட்கள் உள்ளிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யும் நோக்கி, பொலிஸ் அதிகாரிகள் 138 பேர் மற்றும் இராணுவ அதிகாரிகள் 200 பேர் இணைந்து இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டனர். மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேஷ்பந்து தென்னகோன், மேல் மாகாணம் தெற்குக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் கயங்க மாரப்பன, மேல் மாகாண தெற்கு குற்றப் பிரிவின் பணிப்பாளர், பொலிஸ் அத்தியட்சகர் லித் அபேசேகர ஆகியோரின் பணிப்புரைக்கமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கையின் கீழ், 61 வீடுகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. 196 நபர்கள் சோதனை செய்யப்பட்டனர்.

இதன்போது ஹெரோய்ன், ஐஸ், சட்டவிரோத மதுபானம், வாள்கள், மன்னா கத்தி, தடைசெய்யப்பட்ட கத்திகள் மற்றும் 12 கையடக்கத் தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளின் போது சந்தேகத்தின் பேரில், 40 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## புலி ஆதரவாளர்களின் முயற்சியை தொடர்வதற்கு சஜித் முயல்கிறார்

மஹிந்த ராஜபக்ஷவின் குடியுரிமையைப் பல சந்தர்ப்பங்களில் அழிக்கப் புலி ஆதரவாளர்கள் உட்பட பல்வேறு குழுக்கள் முயற்சித்ததாக ஹம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷவின் குடியுரிமை இல்லாதொழிக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் கையொப்ப சேகரிப்பு பிரசாரம் தொடர்பில் ஊடகங்களுக்குப் பதிலளிக்கும் போதே நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புலிப் பயங்கரவாதிகளைத் தோற்கடித்து யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவை இராணுவ நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்ற பின்னர் விடுதலைப் புலிகளின் அனுதாபிகள், சிவில் உரிமைகளை இல்லாதொழிக்க முயன்றனர். அரகலயவின் போது மஹிந்தவை கொல்ல முயற்சித்தார்கள், தற்போது வரியைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்கி பொருளாதாரத்தை வங்குரோத்து செய்ததாக கூறி குடியுரிமையை இல்லாதொழிக்க முயல்வதாகவும், இவை வெறும் பிரபலம் அடைவதற்காக எதிர்க்கட்சிகளின் நாடகங்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

# புதிய கூட்டணி

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இணைந்து சில காலங்களுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட, கதிரை சின்னத்தைக் கொண்ட பொது பெரமுனவுக்கு புத்துயிர் பெற நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதற்காக பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளராக திருமதி சந்திரிகா பண்டாரநாயக்காவை நியமித்து, கட்சியின் தலைமைப் பொறுப்பை மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த உத்தேச கூட்டணியின் தலைமைத்துவத்தைச் சந்திரிகாவிடம் வழங்குவதற்கு ஸ்ரீலங்கா கட்சியின் ஒரு பிரிவினர் எதிர்ப்பு தெரிவித்ததால், அது தொடர்பிலான அறிவிப்பை வெளியாவது தாமதமாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஒரு காலத்தில் அரசியலில் திரைக்குப் பின்னால் இருந்த ஒரு நபராகக் காணப்பட்ட முன்னாள் ஜனாதிபதி, பலம் வாய்ந்த மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தைத் தோற்கடித்து நல்லாட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு பெரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டவராகக் காணப்படுகின்றார்.

இதற்கிடையில், மேலும் பல கட்சிகள் மேலும் மூன்று அரசியல் கூட்டணிகளை உருவாக்க முயற்சித்து வருவதாகக் கூறப்படுகிறது

மகிந்த ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ தலைமையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையில் புதிய அரசியல் கூட்டணி ஒன்று ஸ்தாபிக்கப்பட உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ள.

## 80 பேரடங்கிய குழுவுடன் பறக்கிறார் ஜனாதிபதி

அமைச்சர்களா காஞ்சன விஜேசேகர, கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் ருவான் விஜேவர்தன, உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த விஜயத்தில் இணையவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அந்த பயணத்திற்கான செலவுகள் அனுசரணையாளராலும் அவர்களாலும் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் அறியமுடிகின்றது.

## மனித புதைகுழி அகழ்வு: இன்று மீண்டும் ஆரம்பம்

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் கடந்த 20.11.2023 முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் ஆறாவது நாளான 25ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. அந்த அகழ்வு பணியின் போது 5 மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை சட்ட வைத்திய அதிகாரி க.வசுதேவா குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், துப்பாக்கி சிதறல்கள், சன்னங்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் கையில் அணியப்படும் இலக்கத்தகடும் மணிக்கூடு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாக சட்ட வைத்திய அதிகாரி க.வசுதேவா தெரிவித்துள்ளார் அகழ்வுப்பணிகள் திங்கட்கிழமை (27) தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

## கணினி அமைப்பு பலமுறை செயலிழந்து விடுவதாக தகவல்

சரியான பராமரிப்பு இல்லாததால், இது ஒரு மாதத்திற்கு பலமுறை இதுபோன்று செயலிழந்து வருவதாகவும் குடிவரவுத் துறை செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

மேலும், இந்த கணினி அமைப்பு சர்வதேச இன்டர்போல் பொலிஸுடன் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளதுடன், அதன் வேகம் குறைவதால் கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு திணைக்களத்தின் கணினி அமைப்பு பலவீனமடையும் என்று பேச்சாளர் கூறினார்.

ஞாயிற்றுக்கிழமை (26) நண்பகல் 12.20 மணியளவில் கணினி அமைப்பு படிப்படியாக மீண்டும் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், விமான நிலையத்தில் அதிக பயணிகள் போக்குவரத்து சிறிது தளர்த்தப்படுவதாகவும் பேச்சாளர் மேலும் கூறினார்.

அத்துடன், கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து உலகின் பல்வேறு நாடுகளுக்குச் செல்லும் பல விமானங்களும் அவ்வாறான இடங்களிலிருந்து விமான நிலையத்திற்கு வரும் பல விமானங்களும் இதனால் பாதிக்கப்படலாம் என்றும் பேச்சாளர் எச்சரித்தார்.

எனினும், சுமார் ஒரு மணிநேரத்துக்குப் பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியதாக பேச்சாளர் தெரிவித்தார்.

**கட்டுநாயக்க குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் கணினி அமைப்பு செயலிழப்பால் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து உலகின் பல்வேறு நாடுகளுக்குச் செல்லும் விமானங்களும் பாதிக்கப்படலாம் என கூறப்படுகின்றது**

## வடக்கைச் சேர்ந்த இரு இளைஞர்கள் கைது

அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முயற்சித்த இரு இளைஞர்களே இவ்வாறு விமான நிலைய குடிவரவு , குடியகல்வு கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துருக்கி ஏர்லைன்ஸுக்கு சொந்தமான டி.கே 731 இலக்கம் கொண்ட விமானம் மூலம் பயணிப்பதற்குக் குறித்த இளைஞர்கள் விமான நிலையத்திற்கு வருகை தந்துள்ளனர்.

கொழும்பு - பொரளை பகுதியைச் சேர்ந்த தரகர் ஒருவரால் சகல ஆவணங்களுடன் தயாரிக்கப்பட்ட விசாக்களை பயன்படுத்தி இரு இளைஞர்களும் சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயற்சித்ததாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

## பொலிஸ் உத்தியோகஸ்தரின் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது

06) நிதர்ஷன் வினோத்

சந்தேக நபரைத் துரத்திச் சென்ற போது காணாமல்போய் சடலமாக மீட்கப்பட்ட ஜா - எல பொலிஸ் உத்தியோகத்தரான 26 வயதுடைய கிருஷ்ணமூர்த்தி பிரதாபனின் இறுதிக்கிரியைகள் பூரண அரச மரியாதையுடன் யாழ்ப்பாணம் சாவகச்சேரியில், ஞாயிற்றுக்கிழமை (26) இடம்பெற்றது. பொலிஸ் திணைக்களத்தினர் இறுதி மரியாதையைச் செலுத்தினர்.

இறுதிக் கிரியையின் போது மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் கலந்து கொண்டு உயிரிழந்தவருக்கு இறுதி மரியாதையைச் செலுத்தி உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ஆறுதல் கூறி ஒரு தொகை பணத்தையும் கையளித்தார்.

உயிரைத் துச்சமெனக் கருதி உயிரிழந்த பொலிஸ் கான்ஸ்டபிள் கிருஷ்ணமூர்த்தி பிரதாபன் பொலிஸ் சார்ஜன்டாக பதவி உயர்வு பெற்றுள்ளதுடன் அவருக்குரிய கொடுப்பனவுகள் கிடைக்கப்பெறும் என மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் குடும்பத்தினருக்கு வாக்குறுதியளித்தார்.

உயிரிழந்த பொலிஸ் கான்ஸ்டபிளின் பூதவுடல் அரச மரியாதையுடன் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

## சுதந்திரத்தை மட்டுப்படுத்துமென 56% பேர் நினைக்கிறார்கள்

‘ஆம்’ என்று கூறியவர்களில், 56% பேர் ‘சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் சுதந்திரத்தை இது மட்டுப்படுத்தும்’ என்றும், 25% பேர் ‘அதிக மாற்றத்தை ஏற்படுத்தாது’ என்றும், 19% பேர் ‘சமூக ஊடகங்களின் தவறான பயன்பாட்டைக் குறைக்கும்’ என்றும் கூறியுள்ளனர்.

மசோதாவின் நிலை

செப்டம்பர் 18 அன்று அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டு அக்டோபர் 3 அன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இணையவழி பாதுகாப்பு மசோதா, வரையறுக்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளைக் கொண்ட இணையவழி பாதுகாப்பு ஆணைக்குழுவொன்றை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த மசோதா தனிப்பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டுமாயின் அதிலுள்ள 31 வாசகங்களில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அதன் தற்போதைய நிலையில் நிறைவேற்றப்படுவதற்கு, மூன்றில் இரண்டு பங்கு சிறப்புப் பெரும்பான்மை தேவைப்படுகிறது.

கருத்துக்கணிப்பை நடைமுறைப்படுத்தல்

நாடளாவிய ரீதியில் தேசியளவில் வயது வந்த இலங்கையர்கள் 1,029 பேர் கொண்ட பதில் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு 2023 அக்டோபரில் இந்த கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. 95% நம்பக இடைவெளி மற்றும் ± 3% வழு எல்லையை உறுதிசெய்யும் வகையில் இதன் மாதிரி மற்றும் வழிமுறைகள் கட்டமைக்கப்பட்டுள்ளன.

வெரிட்டே ரிசர்ச் உருவாக்கிய சிண்டிகேட்டட் கணக்கெடுப்புகள் (Syndicated Surveys) கருவியின் ஒரு அங்கமாக இக்கருத்துக்கணிப்பு வன்கார்ட் சர்வே (பிரைவேட்) லிமிடட்டினால் நடத்தப்பட்டது. வெரிட்டே ரிசர்ச்சின் சிண்டிகேட்டட் கணக்கெடுப்பு கருவியானது இலங்கை மக்களின் உணர்வுகளை அளவிடுவதற்கான வாய்ப்பை மற்ற நிறுவனங்களுக்கும் வழங்குகிறது.

## புலிகளின் உபகரணங்களை தேடி முன்னெடுக்கும் அகழ்வு தொடர்கிறது

போரின் இறுதி நாட்களில் முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியில் உள்ள கடற்கரை பகுதி ஒன்றில் விடுதலைப் புலிகளால் புதைத்து வைத்ததாக நம்பப்படும் இடம் ஒன்றினை நீதிமன்ற உத்தரவுக்கு அமையத் தோண்டும் நடவடிக்கை கடந்த 23.11.2023 அன்று ஆரம்பிக்கப்பட்டு ஞாயிற்றுக்கிழமை(26) நான்காவது நாளாக அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இது தொடர்பான முல்லைத்தீவு பொலிஸ் விசேட புலனாய்வாவார்களுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமையக் குறித்த விடயம் கடந்த 19.11.23 அன்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுக் குறித்த பகுதியில் விடுதலைப்புலிகள் ஆயுதங்கள் மற்றும் பெறுமதியான பொருட்களைப் புதைத்து வைத்துள்ளதாக நம்பப்படும் இடத்தில் தோண்டுவதற்கு நீதிமன்றத்தில் கடந்த 19-11-23 அன்று நீதிபதியின் அனுமதி பெறப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் பொலிஸார், விஷேட அதிரடிப் படையினர், இராணுவத்தினர், கிராம சேவையாளர், தொல்லியல் திணைக்களத்தினர், சுகாதார பிரிவினர், தடயவியல் பொலிஸார் பிரசன்னத்துடன் குறித்த அகழ்வுபணிஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சீதுவ துப்பாக்கிச் சூட்டில்

## மகனுக்கு காயம் தாய் தப்பினார்



சீதுவ கொடுகொட வீதியில் சுப்புவத் அரண தேவஸ்தானத்திற்கு அருகில் ஞாயிற்றுக்கிழமை (26) காலை மோட்டார் சைக்கிளில் பின்னால் வந்த இனந்தெரியாத இருவரால் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சீதுவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் தனது தாயாருடன் மோட்டார் சைக்கிளில் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த போதே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார். அந்த மோட்டார் சைக்கிளுக்குப் பின்னால், மோட்டார் சைக்கிளில் வந்தவர்களே துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி தரையில் வீழ்ந்த காயமடைந்த நபரை பிரதேசவாசிகள் சீதுவ பொலிஸாரின் உதவியுடன் ராகம வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். குறித்த இளைஞனுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த தாயாருக்கு எவ்விதமான பாதிப்புகளும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## 400 பொருட்களின் விலைகளை குறைக்க நடவடிக்கை

அத்தியாவசிய பொருட்கள் உள்ளிட்ட 400 பொருட்களின் விலைகளைக் குறைக்க லங்கா சதொச ஊடாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த தகவலை வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பண்டிகை காலத்தை அடிப்படையாகக் கொண்டே இந்த விலை குறைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன், நாட்டில் நிலவும் சம்பா அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்திப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று சங்காபிஷேகம்



சீரடி சாயி சத்குருவின் குருவருளால், கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய, ஐங்கரன் மண்டபத்தில் அமைந்துள்ள சாயி நாதனின் சரணாலயத்தில், 108 சங்குகளால் அபிஷேகமும், பூசையும் திங்கட்கிழமை 27ஆம் திகதி காலை 9 மணிக்கு, நடைபெறவுள்ளது.

சங்கு மிகவும் புனிதமான பொருளாகக் கருதப்படுவது யாவரும் அறிந்ததே. கடலில் பிறக்கும் சங்குகளில், மணிசங்கு, துவரி சங்கு, பாருதசங்கு, வைபவ சங்கு, பார்துயிலா சங்கு, வெண்சங்கு, பூமாசங்கு மற்றும் திரிசங்கு என்று எட்டு வகைகள் உள்ளன.

இச்சங்குகள் ஒவ்வொரு தெய்வங்களின் கரங்களிலும் இருப்பதாக கூறப்பட்டுள்ளது. சிவாலய சங்காபிஷேகங்களின் போது வலம்புரிச் சங்கு சிவனின் அம்சமாகவும், இடம்புரி சங்கு சக்தியின் அம்சமாகவும் நடுநாயகமாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆராதிக்கப்படுகின்றன.

பக்தர்கள் இப்புனித பூசையில் அனைவரும் கலந்துகொள்ளுமாறு சாயி நாதனின் சரணாலய அறங்காவலர்கள் வேண்டிக்கொள்கின்றனர்.

## “மெய்யான தலைவர்களாம்”

■ க.அகரன்



மெய்யான தலைவர்கள் என அரசுடன் இணைந்து செயற்பட்ட சிலரது புகைப்படங்கள் தாங்கிய பாதாதைகள் வவுனியாவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்திற்கு மிக அருகாமையில் தபால் நிலையத்திற்கு முன்பாக குறித்த பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

அவற்றில் முன்னைய அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்த லக்ஷமன் கதிர்காமர், மகேஸ்வரன், ஈ.பி.டி.பி. அமைப்பின் முக்கியஸ்தர்களாக செயற்பட்டவர்கள், ராஜினி திரணகம, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, பத்மநாபா உட்பட பலரது பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

## காளி கோவிலில் திருட்டு



■ ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - மதுரங்குளி, வேலாசிய வீதியில் ஜோசப் வத்தை பகுதியில் அமைந்துள்ள காளி கோவிலில் பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக மதுரங்குளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜோசப் வத்தை பகுதி மக்களால் நீண்ட பராமரிக்கப்பட்டு வந்த குறித்த காளி கோவிலிலிருந்த சுமார் இரண்டு அடி உயரமுள்ள இரண்டு சிலைகள் தரையில் வீசப்பட்டு உடைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அதேநேரம், தரையில் வீசப்பட்டு உடைக்கப்பட்ட காளி சிலைகளுக்கு அருகிலிருந்த பித்தளையால் செய்யப்பட்ட திரிசூலம், காளி சிலைகள் மற்றும் உண்டியல் உள்ளிட்ட பொருட்கள் திருடப்பட்டுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேற்படி, காளி கோவில் மதுரங்குளி நகரத்திலிருந்து வேலாசிய வீதியில் சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மதுரங்குளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## குளியலறையில் இருந்து பழைய சடலம் மீட்பு

இரண்டு மாடி வீடொன்றின் மேல் மாடியிலுள்ள குளியலறையில் மூன்று நாட்களுக்கு முன்னர் மர்மமான முறையில் உயிரிழந்ததாக சந்தேகிக்கப்படும் நபரொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகக் கொட்டாவ பொலிஸார் தெரிவித்தனர்.

பன்னிபிட்டிய, மலபல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றிலிருந்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் ஹோமாகம - டென்சில் கொப்பேகடுவ மாவத்தையைச் சேர்ந்த 39 வயதுடைய சுதத் சிந்தனை ரூபசிங்க என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் தனியார் வங்கியொன்றின் நிறைவேற்று அதிகாரியாக பணியாற்றுகின்றார்.

குறித்த நபர் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் மேற்படி முகவரியில் தனது தாயாருடன் வசித்து வந்ததாகவும், பின்னர் தனது தாய் பாதிரியார் ஆனதன் காரணமாக இந்த இடத்தில் தனியாக வசித்து வந்ததாகவும் தெரியவந்துள்ளது.

இவர் வசித்த அறையிலிருந்து கடும் துர்நாற்றம் வீசியதால் சந்தேகத்திற்கிடமான நபர் ஒருவர் 119 என்ற அவசர இலக்கத்திற்கு வழங்கிய தகவலின் பேரில் பொலிஸார் வந்து அறையின் ஜன்னலை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது குறித்த நபரின் சடலம் கிடப்பதைக் கண்டுள்ளனர்.

## யானை தாக்கியதில் குடும்பஸ்தர் பலி

■ பேரின்பராஜா சபேஷ்

மட்டக்களப்பு - கரடியனாறு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வெள்ளக்கல்மலைப் பகுதியில் சனிக்கிழமை (25) காட்டு யானை தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், காயமடைந்த மற்றுமொருவர் கரடியனாறு பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் இலுப்படிச்சேனை- வேப்பவெட்டுவான் வீதியைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான 41 வயதுடைய கந்தையா கீர்த்திகுமார் என்பவரே உயிரிழந்துள்ளார். .

மாடு மேய்க்கச் சென்று மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பும் வேளையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் கரடியனாறு பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம். நஸீரால் விசாரணைகளை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## கஞ்சாவுடன் இளைஞன் கைது

■ சண்முகம் தவசீலன்

புதுக்குடியிருப்பு - இரணைப்பாலை பகுதியில் சனிக்கிழமை (25) இளைஞனொருவரிடமிருந்து 1 கிலோ 570 கிராம் கஞ்சா பொதியை மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் இரணைப்பாலை பகுதியிலுள்ள சந்தேக நபரின் வீட்டிற்குச் சென்ற பொலிஸார், வீட்டினுள் சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டபோது அவரது வீட்டு அறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கேரளா கஞ்சா பொதியை பொலிஸார் மீட்டுள்ளனர்.

## வாள்வெட்டில் இளைஞர் படுகாயம்



பருத்தித்துறையில் சனிக்கிழமை (25) இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கந்தவுடையார் ஒழுங்கை - பருத்தித்துறையைச் சேர்ந்த ஜெயச்சந்திரன் டிலக்சன் (வயது 23) என்ற இளைஞரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

வீதியால் சென்ற இளைஞரை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் வாளால் வெட்டியுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

## 4 பொலிஸாருக்கு விளக்கமறியல்



வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் 25 வயதுடைய இளைஞர் ஒருவர் சித்திரவதைக்கு இலக்காகி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நால்வரையும் திங்கட்கிழமை (27) வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான், அன்றைய தினம் அடையாள அணிவகுப்புக்கு தயார்ப்படுத்துமாறு சிறைச்சாலை அத்தியட்சகருக்கு கட்டளையிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் ஒரு அதிகாரியைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வவுனியாவில் மாவீரர் குடும்பங்கள் கௌரவிப்பு

வவுனியாவில் மாவீரர் குடும்பங்களைக் கௌரவிக்கும் நிகழ்வு போராளிகள் நலன்புரிச்சங்கத்தில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தோணிக்கல் வைரவர் ஆலயத்தில் இருந்து மங்கள வாத்தியங்களுடன் சங்க அலுவலகத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

இதனையடுத்து, மாவீரர்களுக்கான ஒரு நிமிட அகவணக்கத்துடன், உயிர் நீர்த்த மாவீரர்களுக்கான ஈகை சுடர் ஏற்றப்பட்டு, மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

அத்துடன் தேசிய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த தினமான இன்று (26) மாவீரர் குடும்பத்தினரால் கேக் வெட்டி கொண்டாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

போராளிகள் நலன்புரி சங்கத்தின் தலைவர் அரவிந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாவீரர் குடும்பத்தினர், முன்னாள் போராளிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

க.அகரன்









WCIC
Women's Chamber of Industry and Commerce
Engage - Empower - Enrich
WCIC
மேன்மைக்கு கௌரவம்
Women Entrepreneur Awards 2023
வலுவூட்டல் AIA INSURANCE
இலங்கையின் சாதனைமிக்க மகளிர் தொழில்முனைவோரை அழைக்கின்றோம்



மகளிர் தொழில்முனைவோர் 2023 இல் பங்கேற்க இலங்கையின் மகளிர் தொழில்முனைவோருக்கு அழைப்பு!!
ம.தொ.வ.ச பிரதிபாபிஷேக
மகளிர் தொழில்முனைவோர் விருதுகள் 2023
விண்ணப்ப வகைகள்: வணிக விருதுகள் - தொடக்க, மைக்ரோ, சிறிய, நடுத்தர மற்றும் பெரிய. மாகாண விருதுகள் - ஒவ்வொரு மாகாணத்திலும் சிறந்தவை.

வெற்றிகரமான விண்ணப்பதாரர்கள் டிஜிட்டல் தொழில்முனைவோர், புத்தாக்கமுள்ள தொழில்முனைவோர், சமூக தொழில்முனைவோர், சிறந்த ஸ்டார்ட் அப், மிகச் சிறந்த ஏற்றுமதி சார்ந்த தொழில்முனைவோர், மிகவும் நேர்மறையாகத் திறன் கொண்ட தொழில்முனைவோர், இளம் பெண் தொழில்முனைவோர் மற்றும் 2023 ஆம் ஆண்டின் மிக விரும்பப்படும் பெண் தொழில்முனைவோர் போன்ற சிறப்பு விருதுகளுக்கு பரிசீலிக்கத் தகுதியுடையவர்கள்.

என்ட்ரி கிட்டினை www.wcicsl.lk தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். பூர்த்தி செய்யப்பட்ட என்ட்ரி கிட்டினை தொடர்புடைய இணைப்புகளுடனும் WCIC க்கு நுழைவுக் கட்டணச் சான்றுடனும் 2023 டிசெம்பர் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன் அனுப்ப வேண்டும்.

அனுசரணையாளர்கள்
பிளட்டினம் | டயமன்ட் | கோல்ட் | ப்ரோன்ஸ்
ஊடக பங்காளர் - அச்சு / சமூக ஊடகம்
இணையும் இலத்திரனியல் பங்காளர்கள் | அறிவுசார் பங்காளர் | தொடர்பாடல் பங்காளர்

மகளிர் தொழில்துறை மற்றும் வர்த்தக சம்மேளனம் இலங்கை
இல.380/110, சரண வீதி, பௌத்தாலோக்க மாவத்தைக்கு அருகாமையில், கொழும்பு 07, இலங்கை, தொ.பே: 0112671762, மொபைல்: 0766848080

# சத்திய நெருப்பு விடுதலைக்கு விதையாகி போன நாள்

இறுதி யுத்தம் 2009ஆம் நிறைவுக்கு கொண்டுவருவதற்கு முன்னைய ஆண்டுகளில் கார்த்திகை மாதம் என்றாலே தென்னிலங்கையில் கறுப்பு பூனைப்படை பாதுகாப்பு அதிகரித்தே இருக்கும். யுத்தம் நிறைவடைந்த பின்னரும் சில ஆண்டுகள் அவ்வாறே பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

முக்கிய கேந்திர ஸ்தானங்கள் அல்லது முக்கியஸ்தர்களை இலக்கு வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடத்தக்கூடும் என்றோர் அச்சத்திலேயே பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

எனினும், யுத்தம் நிறைவடைவதற்கு முன்னர், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தின உரையை, உலகநாட்டு தலைவர்கள் உட்பட உள்நாட்டுத் தலைவர்களும் மிகக் கவனமாகக் கேட்பர். அதற்குப் பின்னரே சமாதான பாதையா? அல்லது யுத்தமா? என்பதைத் தேர்ந்தெடுப்பர்.

சமாதான காலங்களிலும் தாக்குதல்கள் இடம்பெறாமல் இல்லை. வலிந்து தாக்குதல்கள் சமாதானத்தைச் சீர்குலைத்துவிட்டன. அதன் பின்னர் கடுமையான தாக்குதல்கள் இரு தரப்புகளிலிருந்தும் மேற்கொள்ளப்பட்டன. இதனால், பல உயிரிழப்பு ஏற்பட்டன. பெரும் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டன.

மாவீரர் தின உரை, ஒவ்வோர் ஆண்டுகளிலும் கார்த்திகை 27ஆம் திகதி மாலை 06.05க்கு ஈகைச்சுடரேற்றியதன் பின்னர் இடம்பெறும். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து உயிர் நீத்த முதல் போராளியான லெப்.சங்கர் (சத்தியநாதன்) இறந்த நவம்பர் 27ஆம் திகதியை தான் தமிழீழ விடுதலைப் புலிகள் மாவீரர் நாளாக 1989இல் பிரகடனப்படுத்தினர்.

1982 நவம்பர் 27, அன்று மாலை 6.05 மணிக்கு. லெப்.சங்கர் தனது தாய்நாட்டுக்காக தன் இன்னுயிரை அணைத்துக் கொண்ட அதே நாள், அதே நேரமான 6.05 மணியே தமிழீழ மாவீரர் நாளில் ஈகைச்சுடரேற்றும் நேரமானது. தற்போது பொதுமக்கள், சுடரேற்றி நினைவுகூர்ந்து வருகின்றனர்.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர், கடுமையான நெருக்கடிக்கு மத்தியிலேயே இவ்வாறான நினைவுகூரல்கள் இடம்பெற்றன. தற்போதைய காலகட்டங்களில், மாவீரர் துயிலும் இல்லங்களில் தற்காலிகமாக அமைக்கப்படும், நினைவுக்கல் முன்பாகவே நினைவுகூரல்கள் இடம்பெறுகின்றன.

கார்த்திகை மாதத்தில் கார்த்திகை தீபம் முக்கியமானது. கார்த்திகை தீபமும், மாவீரர் நாளும் ஒரேநாளில் வந்துவிட்டால், வடக்கு, கிழக்கில் மட்டுமன்றி, தென்னிலங்கையிலும் கார்த்திகை விளக்கீடு செய்யும் தமிழர்களுக்கு பெரும் நெருக்கடியாக அமையும். ஆனால், கார்த்திகை மாத பௌர்ணமி தினத்தன்று, பௌத்தர்களும் விளக்கேற்றி வழிபாடுகளில் ஈடுபடுவார்கள்.

அதுமட்டுமன்றி சிவனொளிபாத மலையின் பருவகாலமும் ஆரம்பமாகும். சிவாலயங்களில் சொக்கப்பனம் எரிக்கப்படும். அவ்வாறான சிறப்புகளைக் கொண்டது கார்த்திகை பௌர்ணமி என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும். எனினும், விளக்கேற்றுவோர் மறைந்த புலிகளை நினைவுகூர்கின்றனர் என்ற சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலைமையே இன்னுமுள்ளது.

அவ்வாறான சந்தேக பார்வை களையப்படவேண்டும் என்பதுடன், கார்த்திகை 27, இலட்சியப் பாதையில் இருந்து சங்கர் என்ற சத்திய நெருப்பு விடுதலைக்கு விதையாகிப் போன நாள் என்பர் என்பதையும் நினைவூட்டுகின்றோம்.




## தமிழ் Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

வெறுப்பு உணர்வு சந்தோஷத்துக்கு வேட்டு. எந்த நேரமும் முகத்தைக் கோணலாக வைத்தபடி, எதனையோ இழந்தபடி இருப்பவர்களை எவர்தான் ரசித்து மகிழப் போகின்றார்கள்.

வாழக்கையை ரசிக்கத் தெரியாதவர்கள் எல்லாவற்றையும் கைவிட்டது போல் நடப்பதுண்டு. தொடர்ந்து துன்பங்கள், தோல்வி, நினைத்தவை நடக்காவிட்டால் அதிலிருந்து மீளும் வரை சோக இருளில், தங்கள் உருவத்துடன் வெறுத்து உலர்ந்த நிலையில் இருப்பது துணிச்சலற்ற நிலையைக் காட்டுகின்றது.

அவரவர் கஷ்டங்கள் அவரவர்களுக்கே தெரியும் என்பார்கள். ஆனால், கஷ்ட, நஷ்டங்களைச் சந்திக்காதவர்கள் எவருண்டு.

பிரச்சினைகளை அப்படியே நிலையாக வைத்தபடி, அடுத்து உடன் எழுந்து களையாமல் இருப்பது தன்னைத்தான் சிதைப்பதாக அமையும். பழையதைத் துறந்து, புது வழி தேடுதலைச் சிரமம் எனக் கருதலாகாது. பலவீனத்துடன் வாழ்வது எழுச்சியைக் களைவது போலாகும். எழுவது சிரமம் அல்ல. சும்மா இருப்பதே கடினம். செயல்படுவது மேல்.

நன்றி: பருத்தியூர் பால– வயிரவநாதன்

# ரணிலின் வெற்றிக் கனவு

**லக்ஸ்மன்**

இலங்கையின் பாதுகாப்புச் செலவீனம் வரவு - செலவுத் திட்டத்தில் 13 சதவீதமாகும். இது வல்லரசு நாடுகளான, அமெரிக்கா, ஐக்கிய இராட்சியம், சீனா போன்ற நாடுகளின் ஒதுக்கீடுகளுக்குச் சமமானது. பெரும் தொகையான துண்டுவிழும் தொகையுடன் இத்தனை சதவீத ஒதுக்கீடு இலங்கைக்குத் தேவையா என்பது பலரதும் கேள்வியாகும். அயல்நாடு ஒன்றின் அச்சுறுத்தலில்லை. நாற்புறமும் கடல் சூழ்ந்துள்ளதான நம் நாட்டுக்கு எல்லைப்புற நாடு ஒன்றின் அச்சுறுத்தலுமில்லை. இவ்வாறிருக்க நாட்டில் யுத்தமில்லாமலிருக்கும்போது எதற்காக இவ்வளவு நிதி என்பது கடந்த பல வருடங்களாக எழுந்துவரும் கேள்வியாகும்.

2009இல் யுத்தம் முடிந்ததாக அறிவிக்கப்பட்ட பின்னர், இக் கேள்வி எழத் தொடங்கிய வேளையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 2020இல் நடத்தப்பட்டது. அது எதற்காக என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்தாலும், அதன் பிறகு உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் இஸ்லாமிய இயக்கங்களின் அச்சுறுத்தல் காரணமாகச் சொல்லப்பட்டது.

இருந்தாலும் இப்போதும் சொல்லப்படுகின்ற முக்கியமான காரணம் விடுதலைப் புலிகளின் மீளுருவாக்கம். இது உண்மையிலேயே சிங்கள மக்களிடம் கிலி கொள்ளச் செய்யும். ஆனாலும், ஒதுக்கீடு இப்போதும் அதிகமே என்பது குற்றச்சாட்டு. அதற்கு இப்போதைய நிலையில் பொருளாதார நெருக்கடியும் காரணமாகக் காட்டப்படுகிறது. இருந்தாலும் வரவு-செலவுத் திட்டம் நிறைவேறும் என்பது இரண்டாவது வாசிப்பு முடிந்த பின்னர் நடைபெற்ற வாக்களிப்பில் தெரிந்துவிட்டது. இதுவே நமது நாட்டின் மீதான மக்கள் பிரதிநிதிகளின் அக்கறையின் வெளிப்பாடு.

அரகலயவின் மூலமாக இலங்கையின் 8ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவியேற்ற ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த இரண்டாவது வரவு- செலவுத் திட்டம் பல்வேறு வாதப் பிரதிவாதங்களுக்கு உட்பட்டிருக்கிறது. கடந்த வருட வரவு -செலவுத் திட்டத்தின் மறுபதிப்பு, இது மக்கள் மீது சுமையையே ஏற்றும் என்றெல்லாம் அவரை ஆதரிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியே விமர்சனம் முன்வைக்கிறது. இருந்தாலும், ரணில் விக்ரமசிங்க தன்னுடைய பிடியிலிருந்து தளர்வைக் காண்பிக்கவேயில்லை.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதாக அறிவித்து பின்னர் அது கைவிடப்படாமலேயே கைவிடப்பட்டதாகிப் போன நிலையில் இருக்கிறது. இந்த நிலையில்தான், 2023ஆம் ஆண்டில் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெறும் என்று அறிவித்துமிருக்கிறார்.

பொருளாதார ரீதியாக ஏற்பட்ட பெரும் நெருக்கடியினால் தோற்றம் பெற்ற அரகலயவினை தன்னுடைய தந்திரமான, கொடூரமான செயற்பாடு மூலமாக அடக்கி பின்னர் அதில் சம்பந்தப்பட்ட பலரைக் கைதும் செய்து வெளிநாட்டுத் தூதுவர்களுக்குக்கூடக் காரணம் சொல்லியிருந்தார்.

1977களில் பாராளுமன்றத்துக்குள் நுழைந்த ரணில் விக்ரமசிங்க ரணில் விக்ரமசிங்க 1994ஆம் ஆண்டு காமினி திசாநாயக்கா படுகொலை செய்யப்பட்டது முதல் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருந்து வருகிறார். 1993-1994, 2001-2004, 2015-2018, 2018-2019, 2022 காலப்பகுதிகளில் ஐந்து தடவைகள் பிரதமராக இருந்திருக்கிறார். 1994-2001, 2004-2015 காலப்பகுதிகளில் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்தார். இரண்டு தடவைகள் பிரதமராக இருந்த காலங்களிலும் இடை நடுவில் இவருடைய பதவி பறிக்கப்பட்டது. ஆனால், நாட்டின் ஜனாதிபதியாக மாத்திரம் அவரால் பதவி வகிக்க முடியவில்லை. இது அவருடைய அரசியல் வரலாற்றினை பூரணப்படுத்தாது என்ற நிலையே காணப்பட்டது.

1999ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா பண்டாரநாயக்காவிடமும், 2005இல் மஹிந்த ராஜபக்ஷவிடமும் தோல்வியடைந்திருந்தார். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடாவிட்டாலும் இப்போது ஜனாதிபதியாக இருந்து வருகிறார். எதற்கும் ஒரு தடவை தேர்தலில் வெற்றிபெற்ற ஜனாதிபதியாகப் பதவியிலிருந்தே ஆகவேண்டும் என்ற பிடிவாதத்துடன் இருக்கும் ரணில் விக்ரமசிங்க, அடுத்த வருடத்தில் ஐக்கிய தேசிய மக்கள் கூட்டணி என்ற பொதுக்கூட்டணியில் யானைச் சின்னத்தில் தேர்தலை எதிர் கொள்ளவிருப்பதாகவே அறிய முடிகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் இலங்கையின் ஜனாதிபதிகளாக 1982ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தன பதவிக்கு வந்தார். இதனையடுத்து, ரணசிங்க பிரேமதாச 1988ஆம் ஆண்டு ஜனாதிபதியானார். 1993இல் அவர் படுகொலை செய்யப்பட்டதையடுத்து டி.பி.விஜேயதுங்க தற்காலிக ஜனாதிபதியாக இருந்தார்.

அதன் பின்னர் இதுவரையில் 1994 முதல் 11 வருடங்கள் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிட்டு ஜனாதிபதியாக இருந்தார். 2005 முதல் 2015 வரையில் மஹிந்த ராஜபக்ஷ பதவியிலிருந்தார். 2015 முதல் 2019 வரை மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசியக் கட்சியின் பின்புலத்துடன் வெற்றிபெற்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பானவராக பதவியிலிருந்தார். பின்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ஜனாதிபதியாக கோட்டாபய ஜனாதிபதியானார்.

> **“ 2024 ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமாரவும் களமிறங்குவார்கள்**

இந்த ஒழுங்கில் பார்த்தால் ரணசிங்க பிரேமதாசவுக்கு பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட யாரும் ஜனாதிபதியாகத் தெரிவாகவில்லை. கடந்த சில பொதுத் தேர்தல்களைப் பார்த்தால் ஐக்கிய தேசியக் கட்சி - நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியாகப் போட்டியிட்ட 2015 பாராளுமன்றத் தேர்தலில் 106 இடங்களைக் கைப்பற்றியது. கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வியைத் தழுவிக் கொண்டது. ஒரு தேசியப்பட்டியல் ஆசனம் கிடைத்து நீண்ட இழுபறிக்குப் பின்னர் ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்திற்கு வந்தார். அவரது அதிர்ஷ்டம் ஜனாதிபதி பரிசு கிடைத்தது. இன்னுமொருவர் அக்கட்சியிலிருந்து பாராளுமன்றத்திற்குள் வந்தார். அதாவது பாராளுமன்றத்துக்குள் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் இருவர் உள்ளனர்.

அதிர்ஷ்டம் அடித்து ஜனாதிபதியாகினால் கூட அவருடைய தந்திரம், முரட்டுத்தனம், பிடிவாதம் போன்ற குணங்களை விட்டுக் கொடுக்காது கிடுக்குப்பிடியுடனேயே ஆட்சியை நடத்திவருகிறார். ஆட்சியிலிருக்கும் ஒருவர் வழங்கும் வாக்குறுதியை அவருடைய காலத்தில் செய்ய முடியாது போகும் இலங்கையில் 2030, 2040 என்றெல்லாம் எதிர்வு கூறல்களை அடுக்கிக் கொண்டு போகும் ஒருவராக ரணில் விக்ரமசிங்க இருந்து வருகிறார். இதனாலேயே அவருக்கான எதிர்ப்பலைகள் வலுத்தவண்ணமேயிருக்கின்றன. அத்துடன் அவை சரிசெய்யப்படாமலேயே இருந்து வருகிறது.

அரசியலமைப்புப் பேரவை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பரிந்துரைகளை நிராகரிக்கிறது. அதற்கு அண்மைய உதாரணம் பொலிஸ் மா அதிபருக்கு வழங்கிய சேவை நீடிப்பு. அதே நேரத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்திலிருந்த ஒரு பகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்தரப்பாக மாறியிருக்கின்றனர். அதேபோன்று அக் கட்சியின் மற்றொரு பகுதியினர் அவருடைய செயற்பாடுகளுக்கும் முயற்சிகளுக்கும், திட்டங்களுக்கும் எதிராகக் கருத்துக்களை முன்வைப்பதுடன் செயற்பட்டும் வருகின்றனர்.

இவ்வாறான நிலையில், எவ்வாறு ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலை நம்பிக்கையுடன் ரணில் எதிர் கொள்ளவுள்ளார் என்பதுவே பலரிடமும் உள்ள சந்தேகம். ஆனாலும், பல தோல்விகளைச் சந்தித்தவர் பல வெற்றிகளைக் கண்டவர் என்ற வகையில் அவரது துணிச்சல் பாராட்டப்படுகிறது.

இந்த நிலையில்தான் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 2024இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தனது வேட்பாளராகக் களமிறக்காது என்பதும் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும், தேசிய மக்கள் சக்தியின் சார்பில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்கவும் களமிறங்குவார்கள் என்று தெரிகிறது. அவ்வாறானால் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் மும்முனைப் போட்டியாக அமையும்.

ஒரு தேசியக் கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள் அக்கட்சியைக் கட்டிக் காத்து வளர்ச்சியடைந்த கட்சியாக நிலை நிறுத்தியிருந்தாலும், கடந்த ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தல் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து சஜித் பிரேமதாச அணி பிரிந்து செல்வதற்குரிய சூழல் உருவானது. இச் சூழல் ரணில் விக்ரமசிங்கவே காரணம் என்று பேசப்பட்டது. ஆனாலும், அது மறுதலிக்கப்படுகிறது.

விமர்சனக் கருத்துக்கள் பல இருந்தாலும் பெரும் பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்திருக்கின்ற இலங்கை நாடானது பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்து வருவதற்கு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கமே காரணம் என்ற ஒரே காரணம் அவரை மீண்டும் ஜனாதிபதியாக்கும் என்றே நம்பப்படுகிறது. இது நம்பிக்கையாக மாத்திரமில்லாமல் போகட்டும்.

எது எப்படியிருந்தாலும், நிதிநெருக்கடியே வாழ்க்கையாகிப் போன இலங்கை மக்களுக்கு நிம்மதி கிடைப்பது மாத்திரமே எதிர்பார்ப்பு.

## கடிதங்கள்

### பகலில் ஒளிரும் வீதி விளக்குகள்

பெரும்பாலான வீடுகளில் ஓரிரு மின் குமிழ்களைத் தவிர, ஏனைய மின் குமிழ்களை அணைத்தே வைத்துள்ளனர். தங்களுடைய வீட்டின் மின்கட்டணம் எகிறிவிடும் என்ற அச்சத்தால் அவ்வாறு செய்கின்றனர்.

எனினும், உள்ளூராட்சி மன்றங்களின் கீழியங்கும், நகர சபை மற்றும் மாநகர சபை அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் பொருத்தப்பட்டிருக்கும் வீதி விளக்குகள் பகல் வேளைகளிலும் ஒளிர்ந்துகொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

வீதி விளக்குகளை மாலை வேளைகளில் ஒளிரச்செய்துவிட்டு, அதிகாலையில் அணைப்பதற்கு ஒருவர் நியமிக்கப்படுவார். அவருக்கு வேதனமும் வழங்கப்படும். எனினும், வீதி விளக்குகளை அணைப்பதில் ஒருசில பணியாளர்கள் அசட்டையாகவே இருந்துவிடுகின்றனர்.

ஆகையால், வீதி விளக்குகளை ஒளிரச்செய்துவிட்டு, அணைக்க தவறும் பணியாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும். நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் மின் பற்றாக்குறை மற்றும் மின் வீணடிப்பைக் கவனத்தில் கொண்டு அதிரடி நடவடிக்கை எடுக்கவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்றும் பலரும் வலியுறுத்துகின்றனர்.



# ஒரு தேசத்தின் ஓலக்குரல் கேட்கிறதா?



ச.சேகர்

“எப்படி வாழ்ந்த நாங்க, இப்ப இப்பிடி கஷ்டப்படுறோமே, இந்த விலைக்கு சாமான் விக்குது, இவ்வளவு இல்லயா இருந்துது, ஏன் இப்ப இந்தளவு கூடிருச்சு” இவ்வாறான வார்த்தைகளே இன்று எம்மில் பலர் மத்தியில் சரளமாகப் பேசப்படுகின்றது. ஏன் வெளிநாடுகளிலிருந்து இலங்கை வந்து தாம் உழைத்து வந்த பணத்தில் இங்குச் செலவிடுவோரும் தெரிவிப்பது, என்ன சாமான் எல்லாம் நெருப்பு விலை விக்குது என்பதையே.

2020ஆம் ஆண்டுக்குப் பின்னர் இவ்வாறானதொரு நிலை நாட்டில் தோற்றம் பெற்றது எனக் குறிப்பிட்டால் அது தவறாகாது. ஆம், அதற்கு முன்னர் இலங்கையில் பெருமளவிலான மக்கள் விரலுக்கேற்ற வீக்கம் போல் சாமான்ய வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தனர்.

இந்நிலையில் நாட்டில் பயங்கரவாதச் செயல் நடந்தேறியது. அதுவும் தேர்தல் ஒன்று நடைபெறவுள்ள கால கட்டத்தில் அவ்வாறானதொரு செயல் நடத்தப்பட்டு, நாட்டின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது என ஒரு நாடகம் ஓடியது, அதற்காக சுமார் 300 பேர் வரையில் உயிர் பலியும் எடுக்கப்பட்டது. இதற்கான காரணம் இன்னமும் புரியாத புதிராக உள்ள நிலையில், பலரின் ஊகங்களும், வெளிவரும் தகவல்களும் ஒரு சாராரை நோக்கி கவனத்தைத் திருப்புகின்றன.


அதனைத் தொடர்ந்து ஆட்சி பீடமேறியவர்களுக்கு நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் எவ்விதமான தூர நோக்குடைய சிந்தனைகளும் இருக்கவில்லை. பொது மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாகத் தெரிவித்து, தமக்குரிய செல்வாக்கை மக்கள் மத்தியில் அதிகரிக்கும் வகையில், பெருமளவிலான வரி விலக்குகள், வழமைக்கு முரணான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

நாட்டின் சர்வதேச கடன் தொகை ஓரிரு ஆண்டுகளுக்குள் பெறப்பட்டதாக இல்லாத போதிலும், நாம் கடந்து கொண்டிருக்கும் இந்த காலப்பகுதியில் ஏற்கனவே பத்தாண்டுகளுக்கு முன்னதாக பெற்றுக் கொண்ட கடன்களை மீளச் செலுத்த வேண்டிய காலப்பகுதியாகும். சாதாரணமாக நாம் வங்கியில் கடன் பெற்றால் கூட, அதனைக் குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு மாதா மாதம் மீளச் செலுத்துவதற்கு இயலுமா, பெறும் சம்பளத்தில் குறிப்பிட்ட சதவீதத்தை இதற்கு ஒவ்வொரு மாதமும் ஒதுக்குவதன் அடிப்படையில் கோரும் தொகை வழங்கப்படுகின்றது. திட்டமிடல் என்பது இதில் அத்தியாவசியமாகின்றது.

இந்நிலையில், பத்தாண்டுகளுக்கு முன்னர் பெறப்பட்ட சர்வதேச கடன்களை மீளச் செலுத்துவதற்கு அக்காலத்தில்கூட ஆட்சியிலிருந்த அரசினால் எவ்விதமான திட்டங்களும் முன்வைக்கப்படவில்லை. சரி இப்போதும் கூட பெற்றுக் கொண்ட மீளச் செலுத்துவதற்குத் திட்டங்கள் எதுவும் வகுக்கப்படவில்லை. இன்றைய நாள் எமது வீட்டில் எப்படி அடுப்பை எரித்து, வயிற்றை நிரப்பிக் கொள்வது எனும் ஓட்டமே முன்னெடுக்கப்படுகின்றது.

இந்நிலையில் இலங்கை வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பொன்று சில தினங்களுக்கு முன்னர் வெளியாகி, பலர் மத்தியில் பரவலாகப் பேசப்படுகின்றது. அதுவே நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்தமைக்கும், வங்குரோத்து நிலையை எய்தியமைக்கும் முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோதாபய ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் டபிள்யு.டி.லக்ஷமன் மற்றும் துணை ஆளுநரான எஸ்.ஆர்.ஆடிகல, ஜனாதிபதி செயலாளர் பி.பி.ஜயசுந்தர ஆகியோர் காரணமாக அமைந்துள்ளதாக உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.






இவர்களைப் பற்றிக் கடந்த வாரம் பாராளுமன்றத்திலும் பேசப்பட்டதுடன், ஜனாதிபதியுடன் சர்வதேச ஊடகமொன்று மேற்கொண்ட நேர்காணலின்போதும் இந்த விடயம் பற்றி கேள்வி கேட்கப்பட்டிருந்தன.

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட நபர்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட வேண்டும் போன்றதாகக் கருத்துகளும் உயர்மட்டங்களிலிருந்து எழுப்பப்பட்டு வரும் நிலையில், உண்மையில் அவ்வாறான ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமாயின், அவர்களுக்கே அது சாதகமானதாக அமைந்துவிடலாம்.



பெரும்பான்மை இனத்தவர்களில் பெரும்பாலானவர்கள் மத்தியில் இன்னமும் ராஜபக்ஷர்கள் மீதான விசுவாசம் குறைந்தபாடில்லை, நாட்டில் தோன்றிய நெருக்கடிகளுக்குக் காரணம் தவறான கொள்கைகள் அல்ல, உலகளாவிய ரீதியில் எழுந்த கொவிட்-19 தொற்றுப் பரவல் தான் என்பது ஆழமாகப் பதியச் செய்யப்பட்டுள்ளது.




மொட்டுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ராஜபக்ஷர்களுக்கு நெருக்கமானவர்கள் பலரும் இவ்வாறான கருத்தையே முன்வைத்து வருகின்றனர். அத்துடன், ராஜபக்ஷ குடும்பம் நாட்டில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது எனும் உணர்வும் பெரும்பான்மை இன மக்களிடையே இல்லாமல் இல்லை. இந்நிலையில், இவர்களின் பிரஜாவுரிமை பறிக்கப்படுவது என்பது மக்கள் மத்தியில் ஒருவித அனுதாப அலையைத் தோற்றுவித்து, அவர்கள் சார்ந்த பிரதிநிதி ஒருவரை மீண்டும் உயர்மட்டத்துக்கு மக்கள் தெரிவு செய்வதற்குக் காரணமாக அமைந்துவிடும். இந்த பெயர் வரிசையில் இடம்பெறாத நாமல் ராஜபக்ஷவுக்கும் தேர்தலில் இது சாதகமான நிலையைத் தோற்றுவித்துவிடும்.



தேவாலயங்களுக்கு வழிபாட்டுக்காகச் சென்ற மக்கள் கொன்று குவிக்கப்படப் போகின்றனர் என்பதை முன்கூட்டியே அறிந்திருந்தும், அது பற்றி எவ்விதமான முன்னாயத்த நடவடிக்கைகளும் எடுக்காமல், பொறுப்புக்கூறாமல், இன்றும் சொகுசான வாழ்க்கையையும், வரப்பிரசாதங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கும் முன்னாள் ஜனாதிபதிகள் வாழும் நாட்டில், பொருளாதார நெருக்கடிக்கும், வங்குரோத்து நிலைக்கும் பொறுப்பாளியாகுங்கள் என ராஜபக்ஷர்களை எதிர்பார்ப்பது எந்தளவுக்கு நியாயமானதாக அமைந்திருக்கும்?




தமது வருமானத்துக்கேற்ப வாழ்ந்து வந்தவர்களை, ஒரு வேளை உணவைத் தேடிக் கொள்ளத் தவிக்கவிட்டு, அத்தியாவசிய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்குக் கூட வரிசைகளில் காத்திருக்கச் செய்து, உயிர்ப்பலி எடுத்து, நாட்டை விட்டு ஓடும் நிலைக்குத் தள்ளி, அன்றாடம் போராடும் நாட்டு மக்களின் ஓலக்குரல் இவர்களுக்குக் கேட்காதா?



ஏமாற்றும் படலம், நாடகங்கள் இன்னும் தொடரும்...



# டொப்ளர் வானிலை ரேடார் வலையமைப்பை நிறுவ நடவடிக்கை

இலங்கையில் இரண்டு செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு ஜப்பானிய மானிய நன்கொடைகளை வழங்கி வைப்பதற்கான உடன்படிக்கையில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேகி மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளர் கே.எம்.எம்.சிறிவர்தன ஆகியோர் கைச்சாத்திட்டனர். இந்நிகழ்வு 2023 நவம்பர் 22ஆம் திகதி நடைபெற்றது. முதல் நன்கொடையின் பெறுமதி 200 மில்லியன் ஜப்பானிய யென்களாக அமைந்திருப்பதுடன், இதனூடாக வடக்கு கிழக்கு கடற்றொழில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இரண்டாம் நன்கொடைத் திட்டத்தின் பெறுமதி 160 மில்லியன் ஜப்பானிய யென்களாக அமைந்திருப்பதுடன், இந்த நன்கொடையினூடாக டொப்ளர் வானிலை ரேடார் வலையமைப்பு நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்த உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வில் இலங்கை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ரூ.435 மில்லியன் நன்கொடையினூடாக இலங்கை கடற்றொழில் துறைமுக கூட்டுத்தாபனத்துக்கு ஐஸ் உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் டிஜிட்டல் தராசுகள் போன்றவற்றை பெற்றுக்கொள்ள உதவியாக அமையும். அத்துடன், இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு மேம்படுத்தப்பட்ட மீன்பிடி வலைகள் கொள்வனவுக்கும் உதவியாக அமைவதுடன், கடற்றொழில் மற்றும் நீரியல்வள திணைக்களத்துக்கு அதி குளிரூட்டிகள் மற்றும் அதி குளிரூட்டிகளைக் கொண்ட டிராக்டர்கள் ஆகியவற்றை கொள்வனவு செய்யவும் உதவும். இந்த முதலீட்டினூடாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த கடற்றொழிலுக்கு அவசியமான அதிகுளிரூட்டல் வசதிகள் மற்றும் நவீன சாதனங்களை விநியோகித்தல், கடற்றொழில் உற்பத்தியின் பெறுமதியை அதிகரித்தல் மற்றும் கடற்றொழில் சமூகத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் போன்றன மேம்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையின் குறுங்கால வானிலை முன்னறிப்பு ஆற்றல்களை மேம்படுத்தும் முயற்சிகள் மற்றும் காலநிலை தாக்கங்களினால் ஏற்படும் தாக்கங்களைத் தணிக்கும் வகையில், ஜப்பானிய அரசாங்கத்தினால் 2017ஆம் ஆண்டு ஜூன் 30ஆம் திகதி முதல் டொப்ளர் வானிலை ரேடார் வலையமைப்பை நிறுவுவதற்கான ஆதரவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்ட வண்ணமுள்ளது. தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக, இந்தத் திட்டத்துக்காக மேலதிக உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. அளவுக்கதிகமான மழைவீழ்ச்சி மற்றும் வறட்சி போன்ற காலநிலையுடன் தொடர்புடைய தாக்கங்கள் இலங்கையில் அதிகரித்து வரும் நிலையில், மேலதிகமாக வழங்கப்பட்டுள்ள உதவித் தொகையினூடாக, டொப்ளர் வானிலை ரேடார் வலையமைப்பை நிறுவக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனூடாக, வானிலைசார் இடர்களை கட்டுப்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இலங்கையிலுள்ள ஜப்பானிய தூதரகம் இரு நாடுகளுக்குமிடையே தொடர்ச்சியான ஆதரவை கட்டியெழுப்ப எதிர்பார்ப்பதுடன், பகிரப்பட்ட சவால்கள் தொடர்பில் கவனம் செலுத்தவும், மீட்சியுடனான எதிர்காலத்தை கட்டியெழுப்பவும் எதிர்பார்க்கின்றது.

## BYD மற்றும் ஜோன் கீல்ஸ் குழுமம்

# கூட்டு உடன்படிக்கையில் கைச்சாத்து




உலகின் முன்னணி புதிய ஆற்றல் வாகன (New Energy Vehicle) உற்பத்தியாளரான BYD ஆனது இலங்கையில் மிகப் பெரிய பட்டியலிடப்பட்ட நிறுவனமான ஜோன் கீல்ஸ் குழுமத்துடன் இணைந்து இலங்கை மக்களுக்கு அதிநவீன புதிய ஆற்றல் வாகனங்களை (New Energy Vehicle) வழங்குவதற்காக ஒரு கூட்டு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

ஷென்ஜெனில் உள்ள BYDஇன் உலக தலைமையகத்தில் இந்த கைச்சாத்திடும் நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் BYD ஆசிய-பசுபிக் வாகன விற்பனை பிரிவின் பொது முகாமையாளர் திரு லியூ ஷூயெலியாங் மற்றும் ஜோன் கீல்ஸ் குழுமத்தின் தலைவர் திரு. கிரிஷான் பாலேந்திரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய திரு லியூ ஷூயெலியாங், “இலங்கையில் மிகப் பெரிய பட்டியலிடப்பட்ட நிறுவனமான ஜோன் கீல்ஸ் நிறுவனத்தை எங்கள் உலக தலைமையகத்தில் வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறோம். கடந்த 28 ஆண்டுகளில், BYD தொழில்நுட்ப புத்தாக்கத்துக்கான தனது உறுதிப்பாட்டிலும், அதன் பசுமை கனவிலும் உறுதியாக இருந்து வருகிறது. பல்வேறுபட்ட வாழ்க்கை முறைகளையும் சூழல் பற்றிய அக்கறையுடனான போக்குவரத்து முறைகளையும் உலகளாவிய ரீதியில் இணைக்க முற்பட்டு வருகிறோம். இந்த கூட்டு உடன்படிக்கையின் மூலம், இலங்கை மக்களுக்கு, மேம்பட்ட, சுற்றுச்சூழலுக்கு உகந்த பயணிகள் வாகனங்களை வழங்க முடிவதோடு, மக்களின் அன்றாட வாழ்வில் ‘மின்சார வாகனத்தை’ ‘அத்தியாவசிய வாகனமாக’ ஆக்கும் எமது குறிக்கோளை அடைய வழிகோலும்.” என தெரிவித்தார்.

இந்த உணர்வை எதிரொலித்து, நிலைத்தன்மைக்கான (Sustainability) அவர்களின் உறுதிப்பாட்டை வலியுறுத்தும் வகையில், குழுமத்தின் தலைவர் திரு. கிரிஷான் பாலேந்திரா கூறியதாவது: “ESG ஆனது எங்களது வணிகச் செயல்முறையில், நிறுவன கலாச்சாரத்தில் மற்றும் சமூகத்துடனான தொடர்பு ஆகியவற்றில் உறுதியாக வேரூன்றியுள்ளது. நாட்டின் நிலையான எதிர்காலத்தை அடைவதற்கான எங்கள் உறுதிப்பாட்டோடு, BYD உடனான கூட்டு உடன்படிக்கையானது தர காத்திருக்கும் அற்புதமான வாய்ப்புகளை நாங்கள் எதிர்பார்த்திருக்கின்றோம். இந்த கூட்டு உடன்படிக்கை மூலம், மேம்பட்ட புதிய ஆற்றல் வாகனங்களை (New Energy Vehicles) இலங்கைக்கு கொண்டு வருவதோடு, எங்கள் மக்கள் உலகின் முன்னணி தொழில்நுட்பமான NEVஐ அனுபவிக்கவும், சூழலுக்கு ஏற்புடையதும், நிலைத்தன்மையான இலங்கையை உருவாக்கவும்பங்களிப்புசெய்யும்”.

புத்தாக்கம் மற்றும் நவீன தொழில்நுட்பத்தில் பல தசாப்தங்கள் கடுமையாக உழைத்த பிறகு, புதிய ஆற்றல் வாகனங்களின் (New Energy Vehicle) முழு தொழில்துறை சார் சங்கிலியின் முக்கிய தொழில்நுட்பங்கள் மற்றும் பட்டரிகள், மின்சார மோட்டர்கள் மற்றும் மின்னணு கட்டுப்படுத்தி உள்ளிட்டவற்றில் BYD மேம்பட்ட நிபுணத்துவத்தை எட்டியுள்ளது.

மேலும் BYD, அதன் Powertrain Systems, பவர் பட்டரிகள், டிரைவ் மோட்டார்கள் மற்றும் மோட்டார் கட்டுப்படுத்தி சிஸ்டம்கள் ஆகியவற்றைச் சுயாதீனமாக உருவாக்கி உலகளாவிய ரீதியில் புதிய ஆற்றல் வாகனங்களின் (New Energy Vehicle) ஒரே உற்பத்தியாளராகத் தனித்து நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தற்போது, BYD இன் புதிய ஆற்றல் வாகனங்கள் 6 கண்டங்களிலும், 70க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் பிராந்தியங்களிலும், 400க்கும் மேற்பட்ட நகரங்களிலும் வியாபித்துள்ளது.

2022ஆம் ஆண்டில் மட்டும், BYD உலகளவில் 1.86 மில்லியனுக்கும் அதிகமான புதிய ஆற்றல் வாகனங்களை விற்பனை செய்துள்ளது. குறிப்பாக, 2023 ஆகஸ்ட் 9ம் திகதியன்று, BYD தனது உற்பத்தியிலிருந்து 5 மில்லியனாவது புதிய ஆற்றல் வாகனத்தை (New Energy Vehicle) உருவாக்கிய உலகின் முதல் வாகன உற்பத்தியாளராகவும் மாறியது.

JKH தொடர்பில்

JKH, கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட மிகப்பெரிய குழும நிறுவனமாவதோடு, 7 வேறுபட்ட தொழில் ரீதியான துறைகளில் 70க்கும் மேற்பட்ட நிறுவனங்களுடன் இயங்கி வருகிறது. 150 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாறு கொண்ட ஜோன் கீல்ஸ் குழுமம், 15,000க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கியுள்ளதோடு, LMD பத்திரிகையால் கடந்த 18 ஆண்டுகளாக இலங்கையின் ‘மிகவும் மதிக்கப்படும் நிறுவனம்’ என்ற தரவரிசையில் இடம்பெற்று வருகிறது. வெளிப்படைத் தன்மைக்கான சர்வதேச இலங்கை நிறுவனத்தின் ‘நிறுவன அறிக்கையிடல் மதிப்பீட்டின் வெளிப்படைத் தன்மை’ மதிப்பீட்டில் ஜோன் கீல்ஸ் தொடர்ச்சியாக மூன்றாம் ஆண்டாக முதலிடத்தைப் பிடித்தது. உலக பொருளாதார மன்றத்தின் முழு உறுப்பினராகவும், ஐக்கிய நாடுகள் சபை உலக ஒப்பந்தத்தில் பங்கேற்பாளராகவும் இருப்பதுடன், ஜோன் கீல்ஸ் ஆனது தனது சமூக நலக் குறிக்கோளான “நாளைக்கான தேசத்தை வலுப்படுத்துதல்” - என்பதை அதன் அறக்கட்டளை மற்றும் சமூக தொழில் முனைவோர் முயற்சியின் மூலம் அடைய எத்தனித்து வருகின்றது.

# போர் விமானத்தில் பறந்த மோடி

இந்திய விமானப்படையின் தேஜஸ் போர் விமானத்தில் பெங்களூருவில் பிரதமர் நரேந்திர மோடி, சனிக்கிழமை (25) பயணம் செய்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்ட வீடியோ மற்றும் புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகியுள்ளன.

முன்னாள் பிரதமர் வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் பெங்களூருவில் உள்ள எச்.ஏ.எல் நிறுவனத்தின் சார்பில் 'தேஜஸ்' இலகு ரகு போர் விமானங்கள், இன்ஜின், உதிரி பாகங்கள் ஆகியவை தயாரிக்கும் பணிகள் தொடங்கப்பட்டன. சுயசார்பு இந்தியா திட்டத்தின் கீழ் முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படும் விமானங்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருகிறார்.



இந்நிலையில், எச்.ஏ.எல் நிறுவனம் அண்மையில் 2 இருக்கைகள் கொண்ட இலகு ரக தேஜஸ் போர் விமானத்தை தயாரித்தது. இந்த விமானம் ஒலியை விட 1.6 மடங்கு அதிக வேகத்தில் பயணிக்கும் ஆற்றல் கொண்டது. பெங்களூருவில் நேற்று காலை பிரதமர் மோடி அந்த விமானத்தை பார்வையிட்டார். பின்னர் பாதுகாப்பு உடை, பறப்பதற்கான தலைக்கவசம் ஆகியவை அணிந்து, இலகு ரக தேஜஸ் போர் விமானத்தில் விமானப்படை விமானிகளுடன் பயணித்தார். நடுவானில் பறக்கும் போது கைகளை உற்சாகமாக அசைத்தவாறு, வெற்றி சின்னத்தையும் அவர் காட்டினார்.

இது குறித்து பிரதமர் நரேந்திர மோடி தனது எக்ஸ் சமூக வலைதள பக்கத்தில், "தேஜஸ் போர் விமானத்தில் வெற்றிகரமாக பயணித்தேன். இதில் பயணித்த அனுபவம் நமது உள்நாட்டு உற்பத்தி திறன்கள் மீதான எனது நம்பிக்கையை அதிகரித்திருக்கிறது. நமது சுயசார்பு திறன் எனக்கு பெருமிதத்தையும் புதிய நம்பிக்கையையும் அளிக்கிறது" என பதிவிட்டுள்ளார்.

கேரளா

## 148 ஷவர்மா ஹோட்டல்களுக்கு சீல்



கேரள மாநிலத்தில் சிக்கன் ஷவர்மா, குழி மந்தி பிரியாணி உட்கொண்ட பலருக்கும் கடந்த சில நாட்களுக்கு முன்பு உடல் நலக்குறைவும், உயிர்ப்பலியும் ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து கேரளாவில் துரித உணவகங்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. ஹோட்டல் ஊழியர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு சான்றிதழ் வைத்திருக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு விதிமுறைகள் வகுக்கப்பட்டன.

இவை முறையாக பின்பற்றப் படுகின்றனவா என கேரள மாநில சுகாதார குழுக்கள் அவ்வப்போது ஆய்வு செய்து வருகிறது. இந்த நிலையில், விதிமுறைகளைச் சரியாகப் பின்பற்றாத 148 ஷவர்மா ஹோட்டல்களுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேசம்

## 'பிரைட்' சிக்கனுக்காக மனைவியை கொன்ற கணவன்

'பிரைட்' சிக்கன் விவகாரம் முற்றிப்போய், தன்னுடைய மனைவியையே கணவன், படுகொலைச் செய்துள்ள சம்பவமொன்று, உத்தரப்பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

பிரேம் நகர் காலனி பகுதியில் வசித்து வரும் தையல் காரரான ஷாஹித் ஹுசைன். தன்னுடைய மனைவியான பானோவிடம், சந்தையில் இருந்து பிரைட் சிக்கன் வாங்குவதற்காக பணம் கேட்டுள்ளார். பணம் தர மனைவி மறுத்த நிலையில், இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

சில நிமிடங்களுக்குப் பிறகு வெளியே சென்ற மனைவி, சிக்கன் வாங்கி



வந்துள்ளார். இருப்பினும், இருவருக்கும் இடையே தகராறு தொடர்ந்துள்ளது. ஒரு கட்டத்தில் ஹுசைன், கத்தரிக்கோலால் மனைவியின் கழுத்தில் குத்தியுள்ளார். இதையடுத்து, உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட மனைவி, அங்கு உயிரிழந்துள்ளார். இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்துள்ள பொலிஸார், ஹுசைனை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பலஸ்தீன்


# 24 பிணைக் கைதிகளை விடுவித்தது ஹமாஸ்

இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக 39 பலஸ்தீனிய கைதிகளுக்கு ஈடாக 24 பிணைக் கைதிகளை ஹமாஸ் விடுவித்தது.

கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி தெற்கு இஸ்ரேல் மீது பாலஸ்தீனத்தில் உள்ள ஹமாஸ் அமைப்பினர் திடீர் ஏவுகணை தாக்குதல் நடத்தினர். இதில் சுமார் 1,200 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 200-க்கும் மேற்பட்டோர் பிணைக் கைதிகளாக பிடித்துச் செல்லப்பட்டனர்.

இதையடுத்து, காசா மீது இஸ்ரேல் போர் தொடுத்தது. 40 நாட்களுக்கும் மேலாக நீடித்த போரில் காசாவில் 14,000-க்கும் மேற்பட்டோர் இறந்தனர், சுமார் 6 ஆயிரம் பேரை காணவில்லை என்று காசா சுகாதார அமைச்சகம் தெரிவித்தது.

இந்நிலையில், கட்டார், அமெரிக்கா, எகிஃப்து ஆகிய நாடுகளின் மத்தியஸ்த முயற்சியால்



இஸ்ரேல் - ஹமாஸ் இடையே 4 நாட்கள் தற்காலிக போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டது.

போர் நிறுத்த முதல் நாளான வெள்ளிக்கிழமை 24 பெண்கள், 15 சிறுவர்கள் என மொத்தம் 39 பேரை இஸ்ரேல் விடுவித்தது. இதற்கு ஈடாக 8 பெண்கள், 3 குழந்தைகள் உள்ளிட்ட 24 பிணைக் கைதிகளை ஹமாஸ் விடுவித்தது. இந்த 24 பேரில் 13 இஸ்ரேலியர்கள் தவிர தாய்லாந்தைச் சேர்ந்த 10 பேர் மற்றும் பிலிப்பைன்ஸை சேர்ந்த ஒருவரும் அடங்குவர் என்று கட்டார் தெரிவித்தது.

காசாவில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் கிடைக்க இந்த போர் நிறுத்தம் வழிவகுத்துள்ளது.

இந்நிலையில், இரண்டாவது கட்டமாக ஹமாஸ் 14 பிணைக் கைதிகளையும் இஸ்ரேல் 42 சிறைக் கைதிகளையும் விடுவிக்க உள்ளதாக தகவல் வெளியானது.

பிரேசில்

## டைனோசர் கால்தடம் கண்டுபிடிப்பு

பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு டைனோசர் இனம் வாழ்ந்து வந்தன. தற்போது அதன் கால் தடங்கள், எலும்புகள், புதை படிவங்கள் என்பன விஞ்ஞானிகளினால் கண்டுபிடிக்கப்படுகின்றன. இதன் மூலம் டைனோசரின் பல இனங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இந்நிலையில், பிரேசிலில் கால்தடங்கள் மூலம் புதிய டைனோசர்



இனத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். பிரேசிலின் அரராகுவாரா நகரில் கண்டுபிடிக்கப்பட்ட கால் தடங்களை ஆய்வு செய்து இது பார்லோவிச்னஸ் ரேபிடஸ் என்று அழைக்கப்படும் புதிய டைனோசர் இனம் கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

மேலும், இது 60 முதல் 90 சென்டி மீற்றர் (2 முதல் 3 அடி) உயரம் கொண்ட ஒரு சிறிய மாமிச விலங்கு என்றும் இது சுமார் 12.5 கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்துள்ளது என்றும் தெரிவித்தனர்.



இங்கிலாந்து பிறீமியர் லீக்

# நியூகாசிலிடம் தோற்ற செல்சி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கி டையிலான பிறீமியர் லீக் தொடரில், நியூகாசில் யுனைட்டெட்டின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-4 என்ற கோல் கணக்கில் செல்சி தோற்றது.

செல்சி சார்பாகப் பெறப்பட்ட கோலை ரஹீம் ஸ்டேர்லிங்க் பெற்றார். நியூகாசில் சார்பாக, அலெக்ஸான்டர் இஸாக், ஜமால் லஸ்செல்லஸ், ஜொலின்டன், அந்தோனி கோர்டன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் சமப்படுத்தியது. சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை எர்லிங் பிறோட் ஹலாட் பெற்றதோடு, லிவர்பூல் சார்பாகப் பெறப்பட்ட கோலை ட்ரெண்ட் அலெக்ஸான்டர்-அர்னோல்ட் பெற்றிருந்தார்.



ஸ்பானிய லா லிகாத் தொடர்:

## சமநிலையில் முடிவடைந்தது

ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகா தொடரில், றயோ வலெக்கனோவின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா சமப்படுத்தியது.

வலெக்கனோ சார்பாகப் பெறப்பட்ட கோலை உனை லொபெஸ் பெற்றதோடு, பார்சிலோனாவின் கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது.

9.4 ஓவர் பந்து வீசி ஓட்டம் எதனையும் கொடுக்காமல்

## 8 விக்கெட்டுகளை வீழ்த்திய பம்பலப்பிட்டி இந்துவின் ரிஷியுதன்

■ அஸ்ஹர் இப்றாஹிம்

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சம்மேளனம், கல்வியமைச்சுடன் இணைந்து நடத்தும் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான பிரிவு இரண்டு கடினபந்து கிரிக்கெட் தொடரில், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிக்கும், பத்தரமுல்ல ஜயவர்த்தன மத்திய கல்லூரிக்குமிடையிலான போட்டி, முல்லேரியா எதிரிவீர சரத்சந்திர விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

முதலில் தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி 126 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுக்களை இழந்த நிலையில், ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பத்தரமுல்ல ஜயவர்த்தன அணி 28 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில், சகல விக்கட்டுக்களையும் இழந்தது.



போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தாலும், இந்துக் கல்லூரி மாணவன் செல்வசேகரன் ரிஷியுதன் 9.4 ஓவர்கள் பந்துவீசி ஓட்டம் எதுவும் கொடுக்காமல் 8 விக்கெட்டுக்களை கைப்பற்றி பெரும் சாதனையொன்றை நிலைநாட்டியுள்ளார்.

இத்தாலிய சீரி ஏ தொடர்:

## அத்லாண்டாவை வென்ற நாப்போலி

இத்தாலிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், அத்லாண்டாவின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் நாப்போலி வென்றது.

நாப்போலி சார்பாக, கிவிச்சா கவாரெஸ்கிலியா, எலிஃப் எல்மாஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். அத்லாண்டா சார்பாகப் பெறப்பட்ட கோலை அடெமோலா லுக்மன் பெற்றிருந்தார்.

இதேவேளை சலெர்னிட்டானாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் லேஸியோ தோற்றது. லேஸியோ சார்பாகப் பெறப்பட்ட கோலை சிரோ இம்மொபைலி பெற்றிருந்தார். சலெர்னிட்டானா சார்பாக, கிறிகோரிஸ் கஸ்டனோஸ், அந்தோனியோ கன்ட்ரெவா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



## அகிலத்திருநாயகிக்கு மாவட்ட செயலகத்தால் கௌரவிப்பு

■ செ. கீதாஞ்சன்

தேசிய மாஸ்டர்ஸ், சிரேஷ்ட தடகள வீரர்கள் விளையாட்டுப் போட்டியில் இலங்கையிலிருந்து கலந்து கொண்ட முள்ளியவளை, முல்லைத்தீவைச் சேர்ந்த அகிலத்திருநாயகி (ஓய்வு பெற்ற சிறைச்சாலைகள் உத்தியோகத்தர்) இரண்டு தங்கப் பதக்கங்களைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

5,000 மீற்றர் நெடுந்தூர ஓட்டம், 5,000 மீற்றர் நெடுந்தூர விரைவு நடை ஆகிய போட்டிகளில் முதலிடம்பெற்று தங்கப் பதக்கங்களையும், 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும், 5,000 மீற்றர் நெடுந்தூர ஓட்டத்தில் நான்காமிடத்தையும் அகிலத்திருநாயகி பெற்றுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு தடகள போட்டியில் உலகளவில் இலங்கைக்கு பெருமைசேர்த்த முல்லைத்தீவு மாவட்ட பெண்மணியினை கௌரவப்படுடுத்தும் நிகழ்வு ஒன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்றுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 27, நவம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.